REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

வடநாட்டிலேயே உருவாக்கத் திட்டமிட்டுவிட்டனர்!

பாட்னா, செப். 7—

இந்தியாவில் முதல் கனரக இயந்திர உற்பத்தி துவங்குகிறது. 17:000 பேர் வேலை செய்ய வாய்ப்பு ஏற்படுகிறது! ரூ. 150 கோடி முதலீடு செய்யப்படுகிறது! ரஷ்யாவும் உதவியளிக்கிறது! ஆனால், இதுவும் வடநாட்டில்—இராஞ்சி அருகே ஆதியாவில் ஏற்படுத்தப்படுகிறது!

மலர் 5] சென்னை: ஆவணி 22உ சனி (7—9—57) ★ ★ வெளியூர்: ஆவணி 23உ ஞாயிறு (8—9—57) [இதழ் 73

'கலைவாணர் தனி மனிதரல்ல-ஓர் சகாப்தம்'

சென்னை மக்களின் வீரவணக்கம்

கழகத் தோழர்கள், கலைஞர்கள் இரங்கலுரை

சென்னை, செப். 7—

"நாட்டை மகிழவைத்து மக்களின் சிந்தனையைத் தூண்டிய நற்பணியாளர்—நகைச்சுவை மன்னர் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் இயற்கையெய்தியமை குறித்து இக்கூட்டம் மிகவும் வருந்துவதுடன் அவரது உறவினருக்கும் கலை உலகினருக்கும் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது."

—என்ற அனுதாபத் தீர்மானம், சென்னை—திருவல்லிக்கேணி கடற்கரையில் குழுமியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களிடையே பொதுச்செயலாளர், இரா. நெடுஞ்செழியன் அவர்களால் படிக்கப்பட்டு, ஒரு நிமிட நேர 'அமைதி'க்குப்பின் நிறைவேற்றப் பட்டது.

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களின் மறைவு குறித்து அனுதாபம் தெரிவிக்கும் பொருட்டு, சென்னை, 42-வது வட்ட தி. மு. கழகக் கிளையின் சார்பில் கூட்டப்பட்ட இக்கூட்டம், நேற்றுமாலை 6-30 மணிக்கு, தி. மு. க. பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கடற்கரை முழுவதும் மக்கள் வெள்ளமாகக் காட்சியளித்தது. சுமார் 3 இலட்சம் மக்கள் கூடியிருந்து கலைவாணருக்கு வீரவணக்கம் செலுத்தினர்.

கூட்டம் துவங்குமுன், தோழர்கள் சேலம்-சீனிவாசனும், நாகூர்-அனிபாவும், கலைவாணர்மீது இரங்கற்பண்கள் இசைத்தனர்.

தலைமைவகித்த பொதுச்செயலாளர் அவர்கள், கலைவாணர் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் தீர்மானத்தைக் கூட்டத்தில் படித்து நிறைவேற்றியதுடன், கலைவாணரின் அரும்பெரும் பணிகளை விளக்கினார்கள்.

தி. மு. கழகத்துக்குக் கலைவாணர் அளித்துவந்த பேராதரவையும், கழகத்திடம் கொண்டிருந்த நீங்காப் பற்றினையும் எடுத்துக் காட்டினார்கள்.

அடுத்து பேராசிரியர் க. அன்பழகன் எம். எல். ஏ. அவர்கள் கலைவாணரின் இழப்பால் தமிழகம் அடைந்த துன்பத்தை எடுத்துக்காட்டி, அவரது இழப்பு ஈடுசெய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும் என்பதை விளக்கியதுடன், கலைவாணரின் தனிப்பெரும் ஆற்றலையும், பண்புகளையும் விவரித்தார்.

பிறகு, துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் பேசுகையில் கலைவாணருக்கும், கழகத்துக்கும் இருந்த தொடர்பினையும், கழகத்திடமும், அண்ணா அவர்களிடமும் அவர் வைத்திருந்த பெருமதிப்பையும் எடுத்துக்காட்டி, கலைவாணரின் பெருந்தன்மைகளையும், கொடையுள்ளத்தையும் பாராட்டினார்.

அடுத்து, தோழர் கண்ணதாசன் அவர்கள் பேசுகையில், கலைத்துறையில் கலைவாணர் புகுத்திய புதுமைகளையும், சீர்திருத்தங்களையும் விளக்கிக் காட்டினார்.

பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார் அவர்கள் பேசுகையில், கலைவாணர் நம் நாட்டில் மட்டுமின்றி உலகத்திலேயே சிறந்ததொரு கலைஞராக—மேதையாக விளங்கினார் என்றார்; 3 கோடி மக்களின் இதயங்களையும் ஒரிதய மாக ஆக்கியவர் கலைவாணர் என்றார்.

அடுத்து தோழியர் சத்தியவாணிமுத்து அவர்கள் பேசுகையில், கலைவாணர் பெண்கள் விடுதலைக்குச் செய்த சேவைகளைக் கூறி, தாய்க்குலத்துக்குப் பெருமை தேடித்தந்த கலைவாணருக்கு பெண்கள் சார்பில் வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டார்.

தோழர் டி. வி. நாராயணசாமி அவர்கள் பேசுகையில், கலைவாணரின் இரக்க உள்ளத்தையும், தன்னலமற்ற சேவையையும் பாராட்டினர்.

தோழர் எஸ். எஸ். இராசேந்திரன் அவர்கள் பேசுகையில், பல்கலை வல்லுநரான கலைவாணர், திரைப் படத்திலும், மற்ற துறைகளிலும் பகுத்தறிவுக கருத்துக்களைப் பரப்பிய விதங்களைக்கூறி, ஏழைக்கு உதவும் அவரது கொடையுள்ளத்தைப் பாராட்டினர்.

தோழர் கே. ஆர். இராமசாமி அவர்கள் பேசுகையில், கலைவாணர் கலையுலகில் ஓர் இரும்புத் தலைவர் என்று கூறி, கலைஞர்களுக்கும், மற்றவர்களுக்கும் அவர் செய்த உதவிகளை எடுத்துக் கூறினர்.

தோழர் எம்-ஜி. இராமச்சந்திரன் அவர்கள் பேசுகையில், கலைஞர்களுக்குக் கலைவாணர் கற்றுத் தந்தப் பாடங்கள் ஏராளம் என்றும், கலைவாணரின் இடத்தை இனி எந்த ஒரு கலைஞனும் எட்டிப்பிடிக்க முடியாது என்றும், கலைஞர்கள் அனைவரும் கலைவாணர் வழி நடக்க வேண்டுமென்றும் கூறி, தென் இந்திய நடிகர் சங்கம் கலைவாணர் குடும்பத்துக்குத் தக்க உதவியளிக்குமென உறுதியளித்தார்.

இறுதியில் நன்றி கூறலுடன் கூட்டம் இரவு 10 மணிக்கு முடிவுற்றது.

'அது அவருடன் முடிந்து விட்டது'

'வள்ளுவர் குறளுக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து காட்டிய ஒப்பற்ற மனிதர்'

அனுதாபக் கூட்டத்தில் அண்ணா இரங்கலுரை

சென்னை, செப். 7—

"கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் தனியொரு மனிதரல்ல அவர் ஓர் **சகாப்தம்**; அவரோடு அந்த சகாப்தமும் முடிந்துவிட்டது. அப்படிப்பட்ட ஓர் சகாப்தம் இனித்தோன்றுவது அரிது.

"எந்த ஒரு நடிகனும் மக்களைக் குலுங்கக் குலுக்கச் சிரிக்க வைக்கமுடியும்; மக்களின் கைதட்டலையும், மாலைகளையும் பெற முடியும்; நல்லதோர் புகழையும் பெற முடியும். ஆனால் நம் கலைவாணருக்குக் கிடைத்த புகழுக்கும் மற்றவர்களுக்குக் கிடைக்கும் புகழுக்கும் வேறுபாடு உண்டு.

"கலைவாணர் மக்களின் உள்ளத்தைத் தொட்டுச் சிரிக்க வைத்தவர். உலகிலேயே, இவர் ஒருவர்தான் மக்களிடத்திலே தொடர்புகொண்டு, மக்களுக்காக உழைத்த கலைஞராவார். இவரைப்போன்ற, நல்ல உள்ளம் படைத்தவர்கள் நாட்டிலே இருப்பது மிக அபூர்வம்.

"கலைவாணர் வெறும் நடிகராக மட்டும் வாழவில்லை; உலகைத் திருத்திய உத்தமராக வாழ்ந்தார். தானும் நல்ல மனிதராக இருந்து, மற்றவர்களையும் நல்லவர்களாக்க முயன்றார். நல்லதொரு கருத்துக் கருவூலமாகத் திகழ்ந்த அவரை, இன்று இழந்து தவிக்கிறது, தமிழகம்!

"மக்களின் மன அழுக்கு நீங்க—மூட நம்பிக்கை அகல—குருட்டுப் பழக்க வழக்கங்கள் ஒழிய—தாழ்ந்த மக்கள் தன்னுணர்ச்சிபெற இதுவரை இந்த நாட்டில் எந்த ஒரு நடிகனும் கலைவாணரைப்போல் பணியாற்ற முனைந்ததில்லை. இந்த நாட்டில் மட்டுமல்ல; மேலைநாடுகளிலும்கூட இப்படிப்பட்ட ஓர் கலைஞன் இருந்ததுமில்லை—இருக்கவுமில்லை.

"கலைவாணர் கலைத்துறையில் மட்டுமே சிறந்தவர் என்பதில்லை. அவர் எந்தத் துறையில் இருந்தாலும் இத்தகைய புகழைப் பெற்றிருப்பார். பள்ளிக்கூடத்தில் போதகராயிருந்தாலும், ஆராய்ச்சி துறையிலிருந்தாலும், பல்கலைக்கழக பேராசிரியராயிருந்தாலும், பலசரக்குக் கடை வைத்திருந்தாலும், மற்றும் எந்தத் துறையிலிருந்தாலும் அவர் இத்தகைய ஏற்றம் பெறக் கூடியவர். இதற்குக் காரணம், அவரது நல்ல உள்ளமும், பண்பும் ஆகும்.

"என். எஸ். கிருஷ்ணன் தனி மனிதரல்ல; தமிழ் நாட்டின் முத்து; மலடி வயிற்றிலே பிறந்த மகன்; புதையல் எடுத்த தனம். தென்னகத்துக்குக் கிடைத்த தேன் விருந்து. கதியற்றுக் கிடந்த தமிழகத்தைச் சீர்திருத்துவதற்காகத், தோன்றிய ஒளி!

"கைபட்டால் பட்ட மரமும் துளிர்க்கும் என்பதுபோல, கலைவாணரால் ஆதரிக்கப்பட்டவர்கள் அனைவரும் இன்று நல்ல நிலைமையிலே இருக்கிறார்கள்.

"'ஈதல், இசைபட வாழ்தல் அதுவல்லது ஊதியமில்லை உயிர்க்கு' என்ற வள்ளுவர் குறளுக்கு இலக்கணமாக வாழ்ந்துகாட்டி, தன்னால் உதவி பெற்ற மற்றவர்களையும் அவ்வாறு வாழச் செய்திருக்கிறார் அவர்."

இவ்வாறு, நேற்றுமாலை திருவல்லிக்கேணி கடற்கரையில் நடைபெற்ற மாபெரும் அனுதாபக் கூட்டத்தில் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்.

நங்கவரம் அறப்போர்

இதுவரையில் 143 பேர் கைது

(நமது நிருபர்—டிரங் செய்தி)

குளித்தலை, செப். 6—

இன்று நடைபெற்ற நங்கவரம் உழவர் அறப்போரில் 20 பெண்கள் உள்பட 36 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்; இத்துடன் மொத்தம் 143 பேர் கைதாகியுள்ளனர்.

இன்றைய அறப்போரைக் கண்டு 1000-க்கு மேற்பட்ட மக்கள் உணர்ச்சிப்பெருக்கால்கைதானவர்களைப் பாராட்டியும், முழக்கமிட்டும் ஆதரவு காட்டினர்.

போலீஸ் தலையிட்டு கண்ணீர்ப் புகையைப் பிரயோகிக்க வேண்டிய நிலையும் உருவாகியது.

ஆனால், விவசாய சங்கத் தலைவர் முத்துகிருட்டிணன், நமது கழக முன்னணி வீரர் அன்பில்-தருமலிங்கம் ஆகியோர் பணிவுடன் கேட்டுக் கொண்டதின் பேரில் கூடியிருந்த மக்கள் அமைதியாகக் கலைந்து சென்றனர்.

இலங்கைக் குடியுரிமை

இதுவரையில் 80,700 பேருக்கே கிடைத்துள்ளதாம்

கொழும்பு, செப். 6—

இலங்கையில் குடியுரிமைகோரி செய்துகொண்ட மனுக்களில் இதுவரை 12,11,000 மனுக்கள் பைசல் செய்யப்பட்டுள்ளனவாம். அவற்றில் 21,000 மனுக்களே ஏற்றுக் கொள்ளப்பட்டனவாம்; 1,80,000 மனுக்கள் புறக்கணிக்கப்பட்டனவாம்; 7,000 பேர் தங்கள் மனுக்களைத் திரும்பப் பெறறிருக்கின்றனராம்.

இதுவரை மொத்தம் 80,700 பேர்களுக்கே குடியுரிமை வழங்கப் பட்டுள்ளன; 6,31,000 பேருக்கு மறுக்கப்பட்டிருக்கிறது; இன்னும் 26,000 மனுக்கள் 'பைசல்' செய்யப்படாமல் உள்ளன.

'அன்பழகன் தேர்தல் செல்லும்'

காங்கிரஸ் அபேட்சகர் மனு தள்ளுபடி

நடைபெற்ற பொதுத் தேர்தலில் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், கழக அபேட்சகராக சென்னை எழும்பூர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

அவரை எதிர்த்துப் போட்டியிட்டுத்தோற்ற காங்கிரஸ்அபேட்சகர் திரு. எம். இராதாகிருஷ்ண பிள்ளை அவர்கள், தேர்தல் அதிகாரி, திரு. அன்பழகன் அவர்களின் அபேட்சாப் பத்திரத்தை ஏற்றுக் கொண்டது தவறு என்றும், தேர்தல் முடிவு செல்லாது என்றும் வழக்குத் தொடர்ந்தார்.

விசாரணைக்குப்பிறகு தேர்தல் செல்லத்தக்கதுதான் என்றும், அன்பழகன் அவர்களின் அபேட்சை மனுவை ஏற்றதில் தவறில்லை என்றும் விசாரணை நீதிபதி திரு. ஜி. கே. தாமோதர ராவ் தீர்ப்பளித்துள்ளார்.

வழக்கறிஞர் வி. பி. இராமன் அவர்கள் அன்பழகன் சார்பில் வாதாடினர்.

அந்நிய மொழிகளைக் கற்பதற்கு வசதி!

"இந்தியாவில் உள்ள 29 பல்கலைக் கழகங்களில், அந்நிய மொழியான ஆங்கிலத்துடன் மற்றும் ஒன்றிரண்டு வெளிநாட்டு மொழிகளைக் கற்க வசதி செய்யப்பட்டுள்ளது" என்று மத்திய துணைக் கல்வி அமைச்சர் சிராமலி மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இந்தியைப் பரப்புவதற்கென, இந்தியப் பிரசார பல திட்டங்களை மேற்கொண்டுள்ளதாம்.

நம் நாடு
தி.மு.க.தினஇதழ் ஆசிரியர்: இரா.நெடுஞ்செழியன்

சென்னை 7—9—57 சனி

எதிர்பார்க்கவில்லை--ஏமாற்றமில்லை!

எதிர்பார்க்கின்றதில் ஏமாற்றமும் அடங்கி இருக்கின்றது.

எவரிடத்திலிருந்தாவது எதை எதிர்பார்த்தாலும், அது கிடைக்காதபொழுது அதை எதிர்பார்க்கின்றவர்கள் ஏமாற்றமடைவது நிச்சயம். ஏமாற்றம் எரிச்சலாக வெளிப்படும் என்பதும் உண்மை.

சிறுத்தையின் உடலில் உள்ள சிறு புள்ளிகளை, தானே விரும்பினாலும் சிறுத்தையால் மாற்றிக்கொள்ள இயலாது. தனது உடற்புள்ளிகளை மாற்றிக்கொள்ள வேண்டும் என்ற நினைப்பு சிறுத்தைக்கு ஏற்படவும் ஏற்படாது.

கைப்பாக இருப்பது எட்டியின் இயல்பு. இனிப்பாக இருப்பது கரும்பின் இயல்பு.

இதே நிலையில் இருப்பதுதான் வடநாட்டு ஏகாதிபத்தியம்—இந்தியப் பேரரசு.

தென்னாட்டையும் வடநாட்டையும் ஒப்பவைத்து நோக்கி, ஒரே பொதுநெறியைக் கடைப்பிடிப்பது என்பது வடநாட்டு ஏகாதிபத்தியத்திற்கு உடன்பாடு இல்லாதது. இது, இன்று நேற்று ஏற்பட்ட பிணி அல்ல. முறையாக எழுதப்பட்ட வரலாற்றுக் காலத்துக்கு முன்பிருந்தே தோன்றி, ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரோடி, வடநாட்டு ஏகாதிபத்தியத்திடம் வளர்ந்துவரும் பயங்கரமான தொழுநோயாகும்.

இந்தியத் துணைக்கண்ட வரலாறு இதற்குச் சான்று. நிலவி வரும் புராண ஏடுகளும் இதற்கு எடுத்துக்காட்டு.

ஆங்கில ஏகாதிபத்திய ஆதிக்க முனைப்பை எதிர்த்து 1857-ல் இந்தியத் துணைக்கண்டத்தில் பெரும்தொகை மக்கள் ஒத்துழைப்பின்றி, அதிகாரத்தை இழந்த அல்லது அதிகாரத்தை இழக்கும் தருணத்தை நெருங்கிவிட்ட சில மணிமகுடதாரிகள் செய்த போராட்டத்திற்கு, முதல் சுதந்திர எழுச்சி எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. அதை இன்றுள்ள மக்களுக்கு நினைவுறுத்துவது என்ற பெயரில் இந்தியப் பேரரசு தீவிரமாக முயன்றதுடன், பெருந்தொகையைச் செலவும் செய்து, தன்னை நன்கு விளம்பரப்படுத்திக்கொண்டும் விட்டது.

சுதந்திரத்துக்குள்ள இலட்சணப்படி 1857-ம் ஆண்டில் நடந்ததாகக் கூறப்படும் போராட்டம் சுதந்திரப் போராட்டந்தானா, அதில் பங்குகொண்டிருந்த மகுடதாரிகள் அனைவரும் தேசிய விடுதலை ஆர்வத்தால் உந்தப்பட்டவர்கள் தானா என்பன விவாதத்திற்குரிய விவகாரம். அதன் உண்மை—பொய்மை எப்படியோ இருக்கட்டும்.

இந்தியப் பேரரசு, அதை முதல் சுதந்திரப் போர் என்று கூறுகிறது. அதற்காக நூற்றாண்டு விழாவும் கொண்டாடிவிட்டிருக்கிறது. அவ்விழாவிற்கென, இலட்சக்கணக்கில் பணத்தைச் செலவிட்டும் தீர்ந்துவிட்டது. எனவே, இவ்வகையில் இந்தியப் பேரரசின் கூற்றை அப்படியே உண்மையென ஒப்புவோம்.

1857-ல் மூண்ட சுதந்திரப் போர்ச்சம்பவங்கள்சிலவற்றைத் திரைப்படமாக்கி வெளியிட்டது இந்தியப் பேரரசு.

அதற்கு உண்மையிலேயே நேர்மையில் நாட்டமும், உண்மையை உலகுக்கு உணர்த்துவதில் அழுத்தமான பற்றும், தென்னாட்டையும் வடநாட்டைப்போல் ஒன்றெனக் கொள்ளும் விரிந்த நற்பண்பும் இயல்பாக இருந்திருக்குமானால் இந்தியப் பேரரசு என்ன செய்திருக்க வேண்டும்? அந்தத் திரைப்படத்தை எப்படி உருவாக்கி இருக்க வேண்டும்?

1857-க்கு முன்னதாக தமிழ்நாட்டில் நடைபெற்றுள்ள வேலூர் போராட்டச் சம்பவங்களைத் திரைப்படமாக்கி இருக்க வேண்டும். அதற்கு முன் தமிழ்நாட்டில் ஏகாதிபத்திய ஆதிக்கத்துக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த வீரமருது சகோதரர், கட்டபொம்மன், அதற்கு முன்பு திப்பு, ஐதர் முதலியோர் போராட்ட நிகழ்ச்சிகளுக்கு, தாம் எடுத்த திரைப் படத்தில் இடமளித்திருக்க வேண்டும் இந்தியப் பேரரசு. ஆனால், இந்தியப் பேரரசு நடந்துகொண்ட விதம் எப்படி?

ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்துத் தென்னகத்தில் மூண்ட போராட்டச் சம்பவங்கள் ஒன்றைக்கூடப் படமாக்கவில்லை இந்தியப் பேரரசு. அவை பற்றிய குறிப்பைக்கூட அப்படத்தில் குறிப்பிட விரும்பவில்லை இந்தியப் பேரரசு.

வடநாட்டின் தலைமையின் கீழ் மேற்குறித்த தென்னகப் போராட்டங்கள் நடைபெறவில்லாத காரணத்தால், அவைகளைத் திரைப்படமாக்குவதை இந்தியப் பேரரசு விட்டிருக்கக் கூடும். அதுவுமன்றி, ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்து வடநாட்டில் எழுந்த போராட்டங்களுக்கு முன்னதாகவே தமிழ் நாட்டில் அத்தகு போராட்டங்கள் நிகழ்ந்துள்ளன எனப் படம் எடுத்துக் காட்டுவதால், வடநாட்டுப் போராட்டங்களுக்குக் கிடைக்க வேண்டிய தனிப் பெருமை இல்லாது ஒழிந்துவிடுகிறது. எனவே, தமிழ்நாட்டு எதிர்ப்புச் சம்பவங்களை ஒரேயடியாக இருட்டடித்து விடுவதின் மூலம், வடநாட்டு எதிர்ப்புக்குத் தனிப் புகழைத் தேடிக்கொள்ள முடியும் என்ற எண்ணத்திலும்கூட, இந்தியப் பேரரசு நடந்திருக்கக்கூடும்.

நீண்ட நாளைய வரலாற்றுச் சம்பவங்கள் படமாக்கப்படாதது எப்படியோ தொலைந்து போகட்டும். காங்கிரசு நடத்திய போராட்டத்தில் வடநாட்டுத் தலைமைக்குக் கீழ்ப்படிந்து போராட்டம் நடத்திய காங்கிரசு தலைவர்களின் உருவமும், ஆற்றிய அறப்போர்ச் செயல்களும் கூட, இந்தியப் பேரரசு திரையிட்ட திரைப்படத்தில் இடம் பெறாது போவானேன்? இதற்கெல்லாம் நாம் கூறும் சமாதானம், எப்பொழுதும் கூறப்பட்டு வருகின்ற ஒரே ஒரு சமாதானம்தான் இருக்கிறது. தென்னகத்தின்மீது ஆதிக்கம் செலுத்தவேண்டும் என்பதும், என்றென்றைக்கும் தென்னக வரலாற்றுக்கு இருட்டடித்து வரவேண்டும் என்பதுதான் வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் குறிக்கோள். அந்த அடிப்படை குறிக்கோள்படிதான், சுதந்திர விழா திரைப்பட எடுப்பும் அமைந்திருக்கிறது.

இதில் ஆச்சரியமும் இல்லை, அதிர்ச்சியும் இல்லை. ஏமாற்றம் கூட இல்லை.

இது, நாம் எதிர்பாராதது அல்ல. இந்தியப் பேரரசிடம், இதைவிட நாம் இன்னும் அதிகமாக எதிர்பார்க்கின்றோம்.

தென்னகத்தவரை வீரமற்றவர், உரிமை வேட்கை கடுகளவும் இல்லாதவர் எனச் சொல்லாது சொல்லிக்காட்டிய இழிவு மிக்க அந்தப் படத்தை இந்தியப் பேரரசு திரும்பப் பெற்றுக்கொண்டு விட்டது. அது கண்டு சிலர் பூரிக்கின்றனர். 'பார்—பார், பொது மக்கள் சக்தியின் போராற்றலை' என்று சிலர் போதனையும் புரிகின்றனர். 'இனிமேல் வடக்கு—தெற்கு எனப் பேசுவது கூடாது' என்று நமக்கு அறிவுரை கூறவும் வலிய முந்துகின்றனர் சிலர். அதுபற்றி நாளை எழுதுவோம்.

ஓசூர், காசர்கோடு

பற்றி, மைசூர் முதலமைச்சர்

பெங்களூர், செப். 5—

மாநிலங்கள் சீரமைப்புக்கு முன்னர் சென்னை மாநிலத்துடன், தென்கன்னட மாவட்டத்தில் 'காசர்கோடு' இருந்தது.

மாநில சீரமைப்பு 1956-ம் ஆண்டு நவம்பர் திங்களில் ஏற்பட்டபோது, 'காசர்கோடு'

(4-ம் பக்கம் பார்க்க)

மக்கள்சபையில் கழக உறுப்பினர்

ஆர். தருமலிங்கம் கேள்விகள்:

ரூ. 41,92,00,000 கடலில் கரைத்த பெருங்காயமாயிற்று!

இந்திய சர்க்கார் வரி வசூல் இலட்சணம்

இந்தியாவை விட்டுச் சிலர் வெளியேறிவிட்டனராம்; அவர்களுக்கு இந்தியாவில் சொத்து இல்லையாம். அவர்கள் செலுத்த வேண்டிய வருமான வரி வசூலிக்கப்படாமலே உள்ளதாம்; அப்படி வசூலிக்கப்படாமலிருக்கும் தொகை ரூ. 7·25 கோடியாம்!

மூழ்கிப்போன நிறுவனங்களிடமிருந்து ரூ. 5,90 00,000 வருமான வரி வசூலிக்கப்படாமல் உள்ளதாம்!

கலெக்டர்களுக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் மூலம் வசூலிக்க இயலாதென கருதப்படும் தொகை ரூ. 21·83 கோடியாம்!

இதைத் தவிர, வசூலிக்க முடியாதவை மொத்தம் ரூ. 6 94 கோடி உள்ளதாம்!

ஆக மொத்தம் இந்தியப் பேரரசு வசூலிக்கத் தவறிவிட்ட வருமான வரியின் மொத்தத் தொகை ரூ. 41 92 கோடியாகும்.

தோழர் தருமலிங்கம் அவர்களின் கேள்விக்குப் பதிலளிக்கையில், அமைச்சர் இந்தத் தகவல்களை தெரிவித்துள்ளார்.

★

35 இலட்சம் செலவில் வானொலிப் பெட்டிகள்

'இதுவரையில் சமுதாய நலத் திட்டத்திற்காக இந்திய அரசாங்கம் மொத்தம் ரூ. 35 இலட்சம் செலவிட்டு, குறைந்த விலையில் வானொலிப் பெட்டிகள் வாங்கியுள்ளது' என்று, மத்திய விளம்பர அமைச்சர் கேஸ்கர், தோழர் ஆர். தருமலிங்கம் அவர்கள் கேட்ட கேள்விக்குப் பதிலளித்துள்ளார்.

★

ரூ. 209,67,00,000 வருமான வரி

வசூலிக்கப்படவில்லையாம்

1957-ம் ஆண்டு எப்ரல் முதல் தேதிவரை ரூ. 209·67 கோடிக்கான வருமான வரி வசூலிக்கப்படவில்லை என்றும், இதுசம்பந்தமாக மொத்தம் 12,21,121 வழக்குகள் இன்னும் ஆராயப்பட வேண்டியுள்ளது என்றும், மக்கள் சபையில் நிதி அமைச்சர் திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்கள் தோழர் ஆர். தருமலிங்கம் அவர்களின் கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்துள்ளார்.

★

தென் இரயில்வேயில் 'குறி' அறிவிப்புப் பணி

114 பேர் தாழ்த்தப்பட்டவர்கள்

1956-ம் ஆண்டில் மொத்தம் 621 பேர் தென் இரயில்வேயில், கைகாட்டி, குறி அறிவிப்பு (சிக்னல்) பணியில் ஈடுபடுத்தப்பட்டனராம்.

இவர்களில் 114 பேர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களாம்.

தோழர் ஆர். தருமலிங்கம் அவர்கள் கேட்ட கேள்விக்கு இரயில்வே உதவி அமைச்சர் ஷாநவாஸ்கான் இந்தப் பதிலைத் தந்தார்.

★

அரசாங்க சுகாதார நலத் திட்டம்

67,433 மத்தியசர்க்கார்ஊழியர்கள் பயனடைகின்றனராம்!

பாதுகாப்பு, அஞ்சல், தொலைவழி, இரயில்வே முதலிய இலாகாக்களில் உள்ள மத்திய அரசாங்க ஊழியர்கள் நீங்கலாக மொத்தம் 67,433 மத்திய அரசாங்க ஊழியர்கள், அரசாங்கத்தின் சுகாதார நலத் திட்டத்தின் கீழ் பயனடைந்து வருகின்றனராம்.

தோழர் ஆர். தருமலிங்கம் கேட்ட கேள்வியொன்றிற்கு சுகாதார அமைச்சர் கர்மார்க்கர் பதிலளிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

சுதந்தரத்துக்கு முன்பு சொன்னதென்ன - சுயாட்சியில் நடப்பதென்ன?

காங்கிரஸ்காரர்களின் போக்குக்கு மக்கள் சபையில் கண்டனம்

புதுடில்லி, செப். 6—

மாநிலங்களில் கீழ்ச் சட்டசபை, மேல் சட்டசபை என்று இரண்டு மன்றங்கள் இருப்பதுபற்றி மக்கள்சபையில், விவாதம் நடைபெற்றுள்ளது. உறுப்பினர்கள் பலர் மாறுபட்ட கருத்துக்களைத் தெரிவித்தனர்.

ஆந்திர மாநிலத்தில் 90 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு 'மேல் சபை'யை அமைப்பதற்கு மக்கள்சபை அதிகாரமளித்துள்ளது.

ஆந்திர மாநிலத்தில் ஒரு புதிய மேல்சபை அமைக்கப்படவேண்டும் என்றும், மற்றும் எட்டு மாநிலங்களில் மேல்சபை உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதுபற்றியும் மக்கள்சபை விவாதித்துள்ளது.

ரஷ்யாவில் ஒரே சட்டமன்றம் தான் உள்ளது என்று சுட்டிக்காட்டியதுடன், இந்தியத் துணைக்கண்டத்தில் இரண்டு சட்டமன்றங்கள் இருப்பதைப் பொதுவுடமையினர் எதிர்த்தனர்.

ரஷ்யாவில் ஒரே கட்சியின் ஆட்சி நடைபெறுவதாகச் சுட்டிக்காட்டி, 'சோவியத் அரசியல் முறை இந்தியாவைவிட மேலானதல்ல' என்று, மத்திய சட்ட அமைச்சர் சென் பதிலளித்துள்ளார்.

விவாதத்தின்போது காங்கிரஸ் உறுப்பினர் நாராயணதாஸ், 'மக்கள் கருத்தை, கீழ்ச் சட்டசபை நன்கு எதிரொலிக்கும்போது, மேல்சபை அவசியமில்லை' என்றார்.

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலையில் மேல்சபை இருப்பது அவசியமற்றது என்றும், கடந்த காலத்தில் 'மேல்சபை' இயங்குவதை காங்கிரஸ் எதிர்த்துள்ளது என்றும் மற்றொரு காங்கிரஸ் உறுப்பினரான பிர்பால் சிங் குறிப்பிட்டுள்ளார்.

சனநாயக அமைப்பில் மேல் சபை இயங்குவது அவசியமென்றும், சில சமயங்களில் தடைப்படுத்தும் அதிகாரத்தையும் அது பெற்றுள்ளது நல்லது என்றும், ஆனால் இந்த 'மேல்சபைகள்' உளுத்துப்போன பழைய காங்கிரஸ்காரர்களின் புகலிடமாக இருக்கக்கூடாது என்றும் ஆந்திர காங்கிரஸ் உறுப்பினர் மூர்த்தி பேசியுள்ளார்.

'நிலச் சீர்திருத்தம் போன்ற முற்போக்குத் திட்டங்களுக்கு எதிராக, மிராசுகளுக்குச் சாதகமாக மேல்சபை இயங்கிவரும்போது, ஒளிமங்கிய வெறும் நகைபோல, மேல்சபை இல்லாத மாநிலத்திலும் மேல்சபையை வெறும் அலங்காரத்திற்கு வைப்பது கூடாது' என்று ஆந்திரக் கம்யூனிஸ்டு உறுப்பினர் திரு. நாகிரெட்டி தெரிவித்தார்.

சுதந்தரம் பெறுவதற்கு முன்னர், காங்கிரஸ் கட்சி 'மேல்சபை'களை எதிர்த்துப் போராடியதையும், மேல்சபைகள் ஒழிக்கப்பட வேண்டும் என்று கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றியதையும் அவர் நினைவுப்படுத்தினார்.

இந்திய மக்கள் இந்த வீண் செலவை விரும்பமாட்டார்கள் என்றும், இந்த மேல்சபைகள் மக்கள் ஆதரவைப்பெற்று தேர்தலில் வெற்றிபெற முடியாதவர்கள் ஆளும் கட்சியின் தயவுடன் பதவிக்குவரத்தான் பயன்படுகின்றன என்றும் அவர் அழுத்தமாகக் கண்டித்துப் பேசினார்.

இறுதியில் வாக்கெடுப்பு நடைபெற்றது. ஆந்திரத்தில் 90 உறுப்பினர்களைக்கொண்ட மேல்சபை ஏற்படுத்த சபை ஆதரவளித்தது.

மத்தியப் பிரதேசத்தில் இப்போது உள்ள 72 உறுப்பினர்களின் எண்ணிக்கையை 90 ஆகவும், சென்னை மேல்சபையில் இப்போது உள்ள 50 உறுப்பினர்களின் எண்ணிக்கையை 63 ஆக உயர்த்தவும் மக்கள்சபை திருத்தங்கள் நிறைவேற்றியுள்ளது.

சிரிக்க வைத்துச் சீர்திருத்தப் பணியாற்றிய செம்மலுக்கு தமிழ் நாட்டு மக்களின் வீரவணக்கம்

★

சேலம் அனுதாபக் கூட்டத்தில் கழகத் தோழர்கள் இரங்கலுரை

புதிய 'டவுன் ஹால்' கட்டிடத்திற்கு என். எஸ். கிருஷ்ணனின் பெயரையிடுமாறு கோரிக்கை

சேலம், செப். 2—

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் மறைவெய்தியது குறித்து அனுதாபம் தெரிவிக்கும் முறையில் 1—9—57-ந் தேதி மாலை ஒரு மாபெரும் மவுன ஊர்வலம் சேலம் நகர தி. மு. கழகப் பணிமனையிலிருந்து புறப்பட்டு நகரின் முக்கிய வீதிகள் வழியாகச் சென்றது. ஊர்வலத்தில் சென்றவர்கள்கருப்புச்சின்னம்அணிந்து கொண்டிருந்தார்கள். கலைவாணரின் உருவப்படம் ஊர்வலத்தின் முன்னால் எடுத்துச் செல்லப்பட்டது. அந்த மாபெரும் ஊர்வலத்தைக் கண்ணுற்ற பொது மக்கள் அனைவரும் என். எஸ். கே. அவர்களின் மரணத்தை எண்ணி ஆருந்துயரமுற்றனர். நகரின் முக்கிய வீதிகள் வழியாகச்சென்ற அந்த ஊர்வலம் சேலம் குகை நியூ சினிமாவிற்கருகில் உள்ள மைதானத்தை அடைந்ததும் தி. மு. கழகச் சார்பில் அனுதாபப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்குத் தலைமை வகித்த சேலம் நகர தி. மு. கழகச செயலாளர் தோழர் ஈ. ஆர். கிருஷ்ணன் குறிப்பிட்டதாவது :—

"கலைவாணர் என். எஸ். கே. யின் மறைவு ஈடுசெய்ய முடியாத ஒரு பெரிய இழப்பாகும். நல்ல பல சீர்திருத்தக் கருத்துக்களை நகைச்சுவையோடு கலந்து மக்களுக்களித்திருக்கிறார். வேறு யாருமே அவரைப்போல் சீர்திருத்தக் கருத்துக்களைக் கொண்ட நகைச்சுவையோடு நடிப்பதில்லை.

"சுமார் 100 படங்களுக்கு மேல் நடித்த கலைவாணர் தனக்கென்று எதையும் வைத்துக் கொள்ளாது தான் ஈட்டிய வருவாயை நாட்டு நலனுக்கும், குறிப்பாக ஏழை மக்களுக்கும் செலவழித்துள்ளார். அவர் மிகவும் எளிய வாழ்க்கை நடத்தி யாவருடனும் சாதாரணமாகப் பழகி வந்தார்.

"என். எஸ். கே. அவர்கள் சேலம் மாவட்ட தாரமங்கலத்தில்தான் சென்ற திங்கள் 9-ந் தேதி கடைசி முறையாக பொது நிகழ்ச்சியில் கலந்துகொண்டார்; தாரமங்கலம் ஊராண்மைக் கழக சார்பில் அண்ணாவின் படத்தைத் திறந்துவைத்து, தான் நோயினால் கஷ்டப்படுவதையும் பாராது 5 நிமிட நேரம் பேசினார். அன்று மாலையில் சேலம் பொருட்காட்சி கலை அரங்கில் இறுதியாக 'மணமகன்' நாடகத்தில் நடித்தார். சேலத்திலிருந்து சென்ற அவர் சென்னையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பிறகு மரணமடைந்தார். சேலம் பொருட்காட்சிசாலை கலை அரங்கில் ஒவ்வொரு ஆண்டின் நிகழ்ச்சியிலும் என். எஸ். கே. கலந்துகொண்டு வந்துள்ளார்.

"சுமார் 10 ஆண்டுகளுக்கு முன் சேலம் பொருட்காட்சி கலை அரங்கில் என். எஸ். கே நடித்த நாடகத்திற்கு சுமார் 12 ஆயிரம் ரூபாய் ஒரே நாளில் வசூலாயிற்று. அந்தத் தொகை சேலம் கல்லூரி கட்டிட நிதிக்குப் பயன்பட்டது. சேலம் நகராண்மைக் கழகத்தார் நடத்தும் பொருட்காட்சிக்கு ஒவ்வொரு ஆண்டும் தவறாது வந்து நிகழ்ச்சி நடத்தி நிறைய பொருள் ஈட்டிக் கொடுத்த என். எஸ். கே.-யுக்கு மரியாதை செலுத்தும் வகையில் சேலம் நகராண்மைக் கழகத்தார் கட்டவிருக்கும் 'டவுன்ஹால்' கட்டிடத்திற்கு என். எஸ். கே. யின் பெயரை வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"தி. மு. கழகத்திற்கு என். எஸ். கே. ஆற்றிய பணியை நாங்கள் மறப்பதற்கில்லை."

பின்னர், சிற்றுளி ஏ. சுப்பிரமணியம் பேசுகையில் என். எஸ். கே.-யின் சேவையை தி. மு. கழகம் ஒருபோதும் மறக்காது என்றும், என். எஸ். கே.-யின் நினைவாகப் பல படிப்பகங்களை சேலம் நகரில் தி. மு. கழகம் திறக்குமென்றும் குறிப்பிட்டார்.

என். எஸ். கே.-யின் சேவையைப் பாராட்டியும், அவருடைய மறைவுக்கு வருத்தம் தெரிவித்தும் வழக்கறிஞர் சிவப்பிரகாசம், ஏ. சித்தையன் மற்றும் பல தோழர்கள் பேசினர். என். எஸ். கே.-யின் மறைவுக்கு அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம்

சென்ற 30-ந் தேதி இரவு சேலம் நகர தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் நகர தி. மு. கழகச் செயலாளர் தோழர் ஈ. ஆர். கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. கலைவாணர் என். எஸ். கிருஷ்ணனின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து தீர்மனாம் நிறைவேற்றப்பட்டது. அனுதாபம் தெரிவிக்கும்வகையில் செயற்குழுவின் மற்ற நிகழ்ச்சிகள் ஒத்திவைக்கப்பட்டன. (ந-நி.)

★

காஞ்சியில் கடையடைப்பு; சினிமாக்கள் நிறுத்தம்

நகர தி. மு. க. சார்பில் மௌன ஊர்வலம்

30—8—57 பகல் 11-5-க்கு கலைவாணர் என். எஸ். கே. இயற்கையெய்திய செய்தி காஞ்சிக்கு 12-30 மணிக்குக் கிடைத்தது. உடனே தி. மு. க. சார்பில் துண்டு அறிக்கைகள் அச்சடித்து நகரில் உள்ள எல்லா வியாபாரிகளுக்கும், தந்துபொதுமக்களுக்கும் கடையடைப்பு செய்துஅனுதாபம் காட்டுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

மாலை 4 மணிக்கு 'திராவிட நாடு' நிலையத்திலிருந்து தோழர்கள் இரா. வெங்கடேசன், சி. வி. எம். அண்ணாமலை ஆகியோர் தலைமையில், மௌன ஊர்வலம் ஒன்று துவங்கி, ஒவ்வொரு கடையாகச் சென்று கடையடைப்புச் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

நகரின் நான்கு சினிமாக் கொட்டகைகளும் மூடப்பட்டன. ஊர்வலம் இறுதியாக, பெரிய காஞ்சீபுரம் சென்று முடிவுற்றது.

நகரின் எல்லாக் கடைகளையும் மூடி அனுதாபம் தெரிவிக்கப்பட்டது. அன்று காஞ்சீபுரம் நகரமே சோகக்கடலில் ஆழ்ந்திருந்தது.

★

ஈரோடில் சர்வ கட்சி ஊர்வலம்-பொதுக்கூட்டம்

31—8—57-ல் கலைவாணர் என். எஸ். கே. மறைவு குறித்து சர்வகட்சிகள் சார்பில் அனுதாப ஊர்வலமும், பொதுக்கூட்டமும் ஈரோட்டில் நடைபெற்றது.

ஊர்வலத்தில் எல்லாக் கட்சியினரும், கல்லூரி மாணவர்களும், தொழிலாளர்களும் கலந்து கொண்டனர்.

ஊர்வலம் நகரின் முக்கிய தெருக்களின் வழியாகச் சென்று காரைவாய்க்கால் திடலில் முடிவடைந்தது; அங்கு அனுதாபக் கூட்டம் நடத்தப்பட்டது, கூட்டத்திற்கு தோழர் எம். ஏ. ஈஸ்வரன் (காங்) தலைமை வகித்தார்; தோழர்கள் எஸ். அப்பாவு (தி. மு. க.), கே. எஸ். நாச்சிமுத்து (கம்), என். சின்னசாமி (சோ.), கே. யு. கிருஷ்ணன் (பி. சோ.) ஆபிரகாம், சி. கிருஷ்ணன், மற்றும் கல்லூரி மாணவர்களும், தொழிற்சங்கப் பிரமுகர்களும் அனுதாபம் தெரிவித்துப் பேசிய பிறகு ஈ. ஏ. மதார்சா நன்றிகூறக் கூட்டம் முடிவுற்றது.

★

நெல்லையில் அனுதாப ஊர்வலமும் பொதுக்கூட்டமும்

கலைவாணர் மறைவு குறித்து 31—8—57 மாலை 6-30 மணிக்கு தி. மு. கழகச் சார்பில் ஓர் மௌன ஊர்வலம் கழக அலுவலகத்திலிருந்து புறப்பட்டு, முக்கிய வீதிகள் வழியாகச் சென்று காந்தி மண்டபத்தின் முன் அண்ணா திடலையடைந்தது.

அங்கு தோழர் ச. ஆவுடையப்பன் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் நெல்லை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் டி. ஆர். சுப்பிரமணியம், கலைவாணரவர்கள் நாட்டிற்கும், கலைஞர்களுக்கும், பொதுமக்களுக்கும் செய்துவந்த சேவைகளைப் பற்றிப் பேசினார்.

இறுதியில் நெல்லை மாவட்ட தி. மு. கழகச் சார்பில் கலைவாணர் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபம் தெரிவிக்கப்பட்டது; நகரக் கழகச் சார்பில் இரா. பழனிவேலு அனுதாபம் தெரிவித்துக் கொண்டார்.

★

மதுரையில் இரங்கற் கூட்டம்

எம். எஸ். இராமசாமி, அரசுக்கண்ணன், சந்தானம் கலந்துகொண்டனர்

மதுரை, செப். 6—

"கலைவாணர் என். எஸ். கே. அவர்கள், தி. மு. கழக உறுப்பினரல்ல; என்றாலும், அவர் தி. மு. கழகத்தின் மாபெரும் ஆதரவாளர்; மிகப் பெரும் புலவர். தி. மு. கழகம் எத்தகைய உதவிகளை வேண்டினும் விரைந்தோடிவந்து செய்தவர்; அவர் மறைவு நமக்குப் பெரும் பேரிழப்பு"

என்று, 1—9—57 மாலை மதுரை நகர் தி. மு. கழகத்தால் நடத்தப்பட்ட இரங்கற் கூட்டத்தில் தோழர் எம். எஸ். இராமசாமி அவர்கள் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் சொன்னார்:—

"பொருளை ஈட்டி ஈதல் என்ற இலட்சியத்துக்காகவே அவர் ஈட்டினார்; ஈந்தார்.

"இந்தச் சமுதாயத்தில் நமது இலட்சியங்களைத் திரைப்படத்தின் மூலம் நடித்துக் காட்டி. சாதி பேதங்களை ஒழிக்க வேண்டும் என்று தூண்டியவர் என். எஸ். கே. ஆவார். அவர், நடிகர்களிலே நம்மினத்தவர்கட்கும், மற்ற பல நடிகர்களுக்கும் நல்ல துணையாக இருந்தார். அதனால் தான் அவரை கட்சி பேதம், சாதி பேதம், மத பேதம் முதலியவற்றைக் கடந்து எல்லோரும் பாராட்டினார்கள்."

கூட்டத்திற்கு, நகர தி. மு. க செயலாளர் பி. கே. சேதுராமன் தலைமை வகித்துக் கலைவாணரின் தொண்டுகளைப் பாராட்டினார்; சிந்தனையைச் சிரிப்பின் மூலம் ஊட்டிய ஒரு சீர்திருத்தவாதியை இழந்துவிட்டோம் 'ாம்' என்றார் அவர்.

அடுத்துப் பேசிய தோழர் அரசுக்கண்ணன், 'கடைசி மூச்சுள்ளவரை சுயமரியாதை வழி நின்ற கலைவாணர் உயிர் நீத்தார்' என்றார்.

தேம்பும் நெஞ்சுடனும் வீங்கும் கண்களுடனும் நாம் நம் மரியாதையைக் கலைவாணருக்குச் செலுத்தக் கூடியிருக்கிறோம். அவர் ஒரு சாதாரண நடிகர் மட்டுமல்ல;சிறந்தஇலட்சியவாதி. அவர் நாட்டுக்குக் கலைத்துறையில் கிடைத்த நல்லதம்பி! தமிழனுக்குக் கிடைத்த உத்தமபுத்திரன்" என்று தோழர் மா. பாண்டியன் பேசுகையில் கூறினார்.

தோழர் சந்தானம் அவர்கள் மதுரையில் சிலர் அவர் மறைவு குறித்துக் கொடியை இறக்காததைக் கண்டித்துக் கூறினார்.

சிறுமி லில்லி சிறிது நேரம் பேசித் தன் இரங்கலைத் தெரிவித்தது.

கூட்டத்தில் கலைவாணர், கே. ஏ. அருணாசலம், விசாலாட்சி ஆச்சி ஆகியோர் மறைவுக்கு இரங்கல் தீர்மானங்கள் நிறைவேற்றியபின் அனைவரும் ஒரு நிமிடம் அமைதி பூண்டனர்.

ஊர்வலம்

கூட்டத்திற்கு முன்பாக மாலை 4 மணி அளவில் தி. மு. க. தொண்டர்கள் 4,000 பேர் துக்க சின்னங்களணிந்து மௌன ஊர்வலம் புறப்பட்டனர். பெரிய விளக்குத் தூணிலிருந்து புறப்பட்ட இவ்வூர்வலத்தில் முதலில் தோழர் மொராசன் துக்கக் கொடி ஏந்திச்செல்ல, அதன்பின் கலைவாணரது படத்தை ஏந்தி தோழர்கள் பி. இராமானுசன், நாணன் ஆகியோர் வந்தனர். தெருவெங்கும் நின்ற மக்கள் கண்ணீருடன் கலைவாணருக்கு மரியாதை செய்தனர்.

மேலமாசி வீதியில் சில பெண்கள் வாய்விட்டே புலம்பிவிட்டனர், ஊர்வலம் அவர்கட்கு ஊட்டிய நினைவுகளால்!

ஊர்வலம் நான்கு மாசி வீதிகளையும் சுற்றிவந்து அண்ணா திடலையடைந்தது.

நடிகர்கள் ஊர்வலம்

கலைவாணர் காலமானார் என்பதை அறிந்த மதுரை நாடக நடிகர்கள் செயலற்றுப்போயினர்.

30—8—57 மாலை 6 மணி அள

(4-ம் பக்கம் பார்க்க)

★

அண்ணா பேருரையைக் கேட்க வந்துகூடியிருந்த 50 ஆயிரம் மக்கள்

கலைவாணர் மறைவு செய்தி கேட்டு கண்கலங்கி திரும்பினர்

30—8—57-ல், சிதம்பரம் வட்டம் திருமுட்டம் தி. மு. கழகத் துவக்க விழாவில் அண்ணா அவர்களும், மற்ற சட்டமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்ள இருந்தார்கள்.

அண்ணா அவர்கள் சிதம்பரம் வரையில் வந்து மேற்படி நிகழ்ச்சியில் கலந்துகொள்ள இருந்த நேரத்தில் கலைவாணர் மரணச் செய்தி கிடைக்கப்பெற்றவுடன் சென்னைக்குத் திரும்பிவிட்டார்.

அண்ணா வருகிறார்கள் என்ற காரணத்தால் மாலை 4 மணிக்கு திருமுட்டத்தில் ஓர் மாபெரும் ஊர்வலம் துவங்கி தொண்டர்களின் அணிவகுப்போடு— 3 பேர் குதிரைமீதமர்ந்துவர, வாண வேடிக்கைகள் மேளவாத்தியங்கள் முழங்க கூட்டத் தலைவர் ஆர். தட்சிணாமூர்த்தி அவர்கள் மேடைக்கு அழைத்துவரப்பட்டு. 6 மணிக்குக் கூட்டம் அதிர்வேட்டு முழங்க ஆரம்பிக்கப்பட்டது.

தலைவர் முன்னுரைக்குப் பின், ஏ. ஈ. இராமகிருட்டினன் செல்வி - இளங்கோ, புலவர்-கூ. ஆறுமுகம் ஆகியோர் சொற்பொழிவு நிகழ்த்தினர்.

அண்ணா அவர்கள் சிதரம்பத்தில், தோழர் பொன்-சொக்கலிங்கம் அவர்களிடம் கூட்டத்தை அனுதாபக் கூட்டமாக நடத்தி முடிக்கும்படி கூறியதற்கிணங்க, சிதம்பரத்திலிருந்து தோழர் சொக்கலிங்கம் வாடகைக் கார் மூலம் திருமுட்டம் வந்து புலவர்-கூ. ஆறுமுகம் பேசிக்கொண்டிருந்தபோது மேடைக்குச் சென்று என். எஸ். கே. இறந்த செய்தியை மக்களுக்கு எடுத்துச் சொல்லி வருத்தம் தெரிவித்துப் பேசியபின் கூட்டத்தை அனுதாபக் கூட்டமாக மாற்றினார்.

அமைதியான முறையில் கூட்டம் முடிவுற்றது. சுமார் 50 ஆயிரம்மக்கள் குழுமியிருந்தனர்; குழுமியிருந்த அனைவரும் அனுதாபம் தெரிவிக்கும் வகையில் எழுந்து மௌனமாக நின்று மரியாதை காட்டினர்; கண்ணீர் வடித்தனர்.

வந்திருந்த மாலைகள் அனைத்தும் மறைந்த மாவீரர் கலைவாணருக்காக அர்ப்பணிக்கப்பட்டன. கொடிகள் பாதிக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டன. ஊர்வலத்தில் பிடித்துவந்த சுமார் 150 கொடிகளும், தோரணங்களும், வளைவுகளும் உடனே அவிழ்க்கப்பட்டன.

திருமுட்டம் 30—8—57 காலை முதல் மாலைவரையில் அண்ணா வருகையை எதிர்பார்த்து குதூகலமாக அலங்கரிக்கப்பட்டிருந்த காட்சி, கலைவாணர் செய்தி கேட்டு நிலைகுலைந்தது. மக்கள் அனைவரும் அழுது கண்ணீர் வடித்தனர்.

கூட்டத்தில் கலைவாணருக்கு அஞ்சலி செய்து அனுதாபத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. இரண்டு ஊராட்சி மன்ற வரவேற்புக்களும் கிழித்தப்பட்டன.

செய்திப் படத் தயாரிப்பிலும் தென்னாட்டிற்கு

டில்லி செய்த துரோகம்!

தென்னகத்தின் வீர வரலாறு மறைக்கப்பட்ட காரணம் என்ன?

மக்கள் சபையில் தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், ஆர். தர்மலிங்கம் கேள்வி; அமைச்சர் மழுப்பல்

புதுடில்லி, செப். 7—

இந்திய சுதந்தரப் போராட்ட நூற்றுண்டு விழாவையொட்டி, இந்திய அரசாங்க செய்தி—ஒலிபரப்பு இலாகாவால் திரையிடப்பட்ட 'சுதந்தரப் பயணம்' என்னும் படத்தில், தென்னாட்டு நிகழ்ச்சிகள் அடியோடு புறக்கணிக்கப்பட்டிருப்பது குறித்து, மக்கள் சபையில், தி. மு. கழக உறுப்பினர்களான தோழர்கள் ஈ. வெ. கி சம்பத், ஆர். தர்மலிங்கம் ஆகிய இருவரும் கேள்விகள் எழுப்பியிருக்கின்றனர்.

கேள்விகளுக்கு விடையளிக்கும் வகையில் பேசிய செய்தி—ஒலிபரப்பு இலாகா அமைச்சர், வழக்கம்போல ஏதேதோ சொல்லி, மூடி மறைத்து மழுப்பியிருக்கிறார்.

தோழர்கள் சம்பத்தும், தர்மலிங்கமும் கூட்டாகக் கேள்விகளைக் கேட்டிருந்தனர். அவர்கள் கேட்ட கேள்விகள் இவைதான் :—

"இந்திய சுதந்தரப் போராட்டத்தின் கட்டங்கள், நிகழ்விடங்கள், போராட்டத்தில் ஈடுபட்ட தலைவர்கள் பற்றிய ஒரு திரைப் படம், அண்மையில் இந்திய அரசாங்க செய்தி—ஒலிபரப்பிலாகா திரைப் படப் பகுதியினரால் வெளியிடப்பட்டுள்ளதா?

"சுதந்தரப் போராட்டத்தில் ஈடுபட்ட தென்னாட்டினரைப் பற்றியோ தென்னாட்டு இடங்கள் பற்றியோ குறிப்புகள் அப்படத்தில் இணைக்கப்பட்டுள்ளனவா?

"இணைக்காமல், விடப்பட்டிருப்பின், அதற்கான காரணங்கள் யாவை?"

இக்கேள்விகளுக்கு அமைச்சர் அளித்த பதில் இதுதான் :—

"1857 சுதந்திரப் போராட்ட நூற்றுண்டு விழாவையொட்டி, விழாக் குழுவினரின் யோசனைகளைக்கொண்டே அந்தப் படம் தயாரிக்கப்பட்டது.

"வட்டார உணர்ச்சியை மனதில் கொள்ளாமல், சுதந்தரப் போராட்டம் பற்றிய முக்கிய நிகழ்ச்சிகள் மட்டுமே அப்படத்தில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

"அப்படம், இப்பொழுது திரும்பப் பெறப்பட்டுள்ளது. மறு பரிசீலனைக்குப் பிறகு அது மீண்டும் திரையிடப்படும். எனவே, மறு பரிசீலனையின்போது அதில் சேர்க்கவேண்டிய அனைத்தையும் சேர்த்து வெளியிடப்படும்."

★

விளக்கெண்ணெய் ஏற்றுமதி

1956-ம் ஆண்டில் அமெரிக்காவுக்கு மட்டும் இந்தியாவிலிருந்து 20,900 டன் விளக்கெண்ணெய் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது என்றும், அதன் மதிப்பு ரூ. 299 இலட்சம் என்றும் மக்கள் சபையில் நமது கழக உறுப்பினர் தோழர் ஆர். தருமலிங்கம் அவர்கள் கேட்ட கேள்விக்கு மத்திய அமைச்சர் தேசாய் பதிலளித்துள்ளார்.

வட சென்னை தேர்தல் வழக்கு

நிதியளிப்புக் கூட்டம்

8—9—57 மாலை 6-மணிக்கு, வடசென்னை மீனாட்சியம்மன் பேட்டை வாசிகளின் தேர்தல் வழக்கு நிதி அளிப்புக் கூட்டம் இராயபுரம்—மீனாட்சியம்மன் பேட்டை (ராபின்சன் பார்க் அருகில்)யில் தோழியர் சத்தியவாணிமுத்து எம்.எல்.ஏ., அவர்கள் தலைமையில் நடைபெறும்; தி. மு. க. துணைப்பொதுச் செயலாளர் என். வி. நடராசன், தோழர்கள் கண்ணதாசன், என். சிவரத்தினம், எஸ். எஸ். தென்னரசு, இரா. சு. மூர்த்தி ஆகியோர் பேசுவர். டேப்-இராதா மாணிக்கம் இன்னிசை வழங்குவார்.

நிலக்கரி அனுப்புவதிலும்

தென்னாட்டிற்கு இந்தத் தொல்லை?

புதுடில்லி, செப். 6—

ஆண்டுதோறும் ரூ. 3 கோடி செலவிட்டு கரையோரக் கப்பல் போக்குவரத்தை இந்திய அரசாங்கம் ஊக்குவித்துவருகிறது.

வடநாட்டிலுள்ள வங்காளம், பீகார் மாநிலங்களிலிருந்து தற்போது இரயில் மூலமும், கப்பல் மூலமும் தென்னாட்டு மக்களின் தேவைகளுக்கும், தென் பகுதி இரயில்வேக்களுக்கும் தேவையான நிலக்கரி அனுப்பப்படுகிறது.

திங்கள் ஒன்றுக்கு 84,000 டன் நிலக்கரி தென் பகுதி இரயில்வேக்களுக்கு கப்பல் மூலம்தான் அனுப்பப்படுகிறது.

தனியார் துறை தேவைகளுக்காக திங்கள்தோறும் 40,000 டன் நிலக்கரி இரயில் மூலம் அனுப்பப்படுகிறது.

இரயில் மூலம் அனுப்பும் நிலக்கரிக்கு டன் ஒன்றுக்கு 43 ரூ. 50 காசுகளும், கப்பல் மூலம் அனுப்ப டன் ஒன்றுக்கு 70 ரூ. 50 காசுகளும் போக்குவரத்துச் செலவாகிறது.

தென்னாட்டுக்கு வடநாட்டிலிருந்து நிலக்கரி அனுப்பப்படுவது பெரும் அளவு கப்பல் மூலமே என்பது குறிப்பிடத்தக்கது.

மதுரையில் இரங்கற்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வில் திரு. புளிமூட்டை இராமசாமி தலைமையில் அவர்கள் நான்கு மாசி வீதிகளையும் சுற்றி வந்தனர். 200 ஆண்பெண் நடிகர் கள் சென்ற அவ்வூர்வலத்தில் தோழியர் என். எம். சுந்தராம்பாள், தோழர்கள் திருப்பதி, எம். ஆர். முத்துச்சாமி ஆகியோரும் வந்தனர்.

ஊர்வலம் முத்தமிழ் அச்சகத்தை வந்தடைந்ததும் பலர் தங்கள் துக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு பேசினர்.

திரு. புளிமூட்டை இராமசாமி, உணர்ச்சியால் தடுமாறித் தடுமாறிப் பேசினார்.

எம். ஜி. ஆர். மன்றம் துக்கம்

1—9—57-ல், எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் இரங்கற் கூட்டம் நடைபெற்றது; தோழர் மா. இராமகிருட்டினன் தலைமை வகித்தார். நா. எழில் இறைவன், கதிரேசன், சு. சண்முகம், எஸ். மீனாட்சிசுந்தரம் ஆகியோர் நகைச்சுவை மன்னரின், பண்பு குறித்தும், அவர் ஆற்றிய தொண்டு குறித்தும் பேசியபின், ஓர் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திட்டச் செலவுக்கே திண்டாடும் நேரத்தில்!

புதுடில்லி, செப். 6—

ஐந்தாண்டுத் திட்டம் சம்பந்தமாகக் கூட்டப்பட்ட கூட்டங்கள், விவாத அரங்குகள் சம்பந்தமாக மட்டும் திட்டக் குழுவுக்கு ரூ. 64,800 செலவு ஏற்பட்டதாம்.

இது தவிர, செய்தி—ஒலி பரப்பு இலாகா ஐந்தாண்டுத் திட்டம் சம்பந்தமாக 3 அரங்கங்கள் நடத்திய வகையில் ரூ. 2,680 நிதியுதவி அளிக்கப்பட்டிருக்கிறதாம்.

கம்ப இராமாயணம் வெளியிட

40,000 மானியமாம்!

புதுடில்லி, செப். 6—

கம்ப இராமாயணத்தை வெளியிடும் திட்டத்திற்காக, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு, பல்கலைக் கழக மானியக் கமிஷன் தற்காலிக மானியமாக ரூ. 40,000 அளித்துள்ளதாம். இத்தொகையில் ரூ. 20,000 1955—56-லும், மற்றும் ரூ. 20,000 1956-57லும் ஆக இரண்டு தவணைகளாகத் தரப்பட்டதாம்.

திருச்சியில் ஊர்வலமும் பொதுக்கூட்டமும்

திருச்சி தி. மு. கழகச் சார்பில் 1—9—57 மாலை 5 மணிக்கு, தோழர் எம். எஸ். மணி தலைமையில், மெயின்கார்ட் கேட்டிலிருந்து 'கலைவாணர் மறைவு குறித்து' ஒரு அனுதாப ஊர்வலம் புறப்பட்டு டவுன் ஹாலை அடைந்தது.

மாலை 6 மணிக்கு, டவுன் ஹாலில் ஓர் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது. தோழர் ஜி. பராங்குசம் தலைமை வகித்தார். தோழர்கள் எம். எஸ். மணி, எஸ். நெடுமாறன், ஆர். நாகசுந்தரம், ஐ. எம். ஷரீப் ஆகியோர் கலைவாணர் மறைவு குறித்துப் பேசியபின் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு கூட்டம் முடிவடைந்தது.

ஓசூர், காசர்கோடு பற்றி

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கேரள மாநிலத்துடன் இணைக்கப்பட்டுவிட்டது.

செப்டம்பர் 20-ந் தேதி நடைபெறவிருக்கும் மேற்கு மண்டலக் குழுவின் கூட்டத்தில் இதுபற்றி விவாதித்து, எவ்வித சிக்கலுமின்றி 'காசர்கோடு' மைசூர் மாநிலத்துடன் சேர்க்கப்படலாம் என்று மைசூர் முதலமைச்சர் நிஜலிங்கப்பா நிருபர்களிடம் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர், இப்போது சென்னை மாநிலத்தில் சேலம் மாவட்டத்தில் உள்ள 'ஓசூர்' மைசூர் மாநிலத்துடன் இணைக்கப்படவேண்டும் என்று ஓசூர் மக்கள் விரும்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

தேனி கழகத் தோழர்கள் அஞ்சலி

கலைவாணர் என். எஸ். கே. இறந்த செய்தியை வானொலி மூலம் கேட்டதும், கழகக் கொடி பாதிக் கம்பத்தில் தாழ்த்தி பறக்க விடப்பட்டது.

31—8—57 காலை 10 மணிக்கு, மணிக்கூண்டுக்கருகிலுள்ள கழகக் கொடி மரத்திலிருந்து செயலாளர் ஆ. கருப்பையா தலைமையில் ஓர் ஊர்வலம் நகரின் முக்கிய வீதிகளின் வழியே சென்று மீண்டும் கழகக் கொடி மரத்திற்கடியில் வந்து அனுதாபக் கூட்டம் நடத்தப்பட்டது. செயலாளர் தலைமையில் தோழர்கள் கே.பி.பி.எம். நாராயணசாமி, மு. தங்கராசன் ஆகியோர் பேசியபின், அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஒரு நிமிடம் மௌனமாக இருந்து அனுதாபம் தெரிவித்ததும் கூட்டம் முடிவுற்றது.

காணவில்லை

தங்கவேலு என்னும் 3½ வயதுச் சிறுவனை 1-9-57 காலை 11 மணி முதல் காணவில்லை. அவன் தாயார் ஊணுறக்கமின்றி கவலையில் ஆழ்ந்துள்ளார். பையனைக் கண்டுபிடித்து ஒப்படைப்பவர்களுக்கு ரூ. 50 அன்பளிப்பு வழங்கப்படும். அடையாளம் :— மாநிறம்; சமர் கிராப்பு; நீலக் கோடுகள் உள்ள அரைக் கைச் சட்டையுடன், காதில் பொன் லோலாக்கும், இடுப்பில் வெள்ளி அரைஞாணும், காலில் வெள்ளி கொலுசும் அணிந்திருப்பான். தந்தையின் பெயர் சந்திரசேகரன்; தாயார் பொன்னம்மாள். நகைகளைப் போக்கடித்துவிட்டாலும் பரவாயில்லை. பையனை ஒப்படைத்தால் மேற்சொன்னபடி அன்பளிப்பு தரப்படும்.

ஒப்படைக்க வேண்டிய முகவரி :

செந்தமிழ் இளைஞர் மன்றம்
நெ. 93, காட்டூர் நல்லமுத்து ஆசாரி தெரு,
சூளை, சென்னை-7.

கழகக் கூட்டங்கள்

★

நத்தம் :
அழகிரி திடலில்
9—9—57 மாலை 5 மணிக்கு
பேசுபவர் :
இரா. நெடுஞ்செழியன்
இன்னிசை : கே. பி. யோகராசன்

★

பள்ளப்பட்டி :
மங்கைத் திடலில்
9—9—57 இரவு 9-30 மணிக்கு
தலைவர் : பழ. இரத்தினம்
பேசுவோர் :
இரா. நெடுஞ்செழியன்
மு. க. இளமொழி

சென்னை—நுங்கம்பாக்கம்

இளைஞர் மறுமலர்ச்சி மன்றம் 7—9—57 இரவு 9-மணிக்கு, மேற்படி மன்றத்தின் செயற்குழுக் கூட்டம் மன்றப் பணிமனையில் நடைபெறும்.

8—9—57-ல் சேலத்தில்

க. அன்பழகன்

நிகழ்ச்சிகள்

★

காலை 9 மணி : புத்துமாரியம்மன் கோவில் தெருவில், கழகத் தோழர் திருமணம்.

மாலை 6-30 மணி : பொன்னம்மாப்பேட்டை 16-வது வட்டம் சார்பில் பொதுக்கூட்டம்.

இரவு 8-30 மணி : குகை மாரியம்மன் கோவில் அருகில் 28, 29 வட்டம் சார்பில் சொற்பயிற்சி மன்ற நூல்நிலையத் திறப்புவிழா இந்நிகழ்ச்சிகளில் தோழர்கள் ஈ. ஆர். கிருஷ்ணன், எ. மாரியப்பன் எம்.சி. கலந்து கொள்வார்கள்.

9—9—57 : கரூர்

வானொலியிலும் வடவர் ஆதிக்கமா?

சுதந்தர விழா நிகழ்ச்சிகளில் தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டதேன்?

மக்கள்சபையில் தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், ஆர். தர்மலிங்கம் எழுப்பிய வினாக்கள்

"சுதந்தர விழாவையொட்டி, கடந்த ஆகஸ்டு 14-ந் தேதியன்று அனைத்திந்திய வானொலி நிலையந்தாரால் ஒலிபரப்பப்பட்ட நிகழ்ச்சிகளில், தமிழ் நிகழ்ச்சி சேர்க்கப்படாமை குறித்து கழக உறுப்பினர்களான தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், ஆர். தர்மலிங்கம் இருவரும் கேள்வி எழுப்பியிருக்கின்றனர்.

"நாட்டுப் பற்றும், வீரச் செயல்களும் எடுத்துக்காட்டப்படும் வகையில் தயாரிக்கப்பட்ட கலை நிகழ்ச்சிகள், கடந்த ஆகஸ்டு 14-ந் தேதியன்று அனைத்திந்திய வானொலி நிலையத்தில் ஒலிபரப்பப்பட்டனவா?

"எந்தெந்த மொழிகளில் அந்நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன?

"அவற்றில் ஒரு நிகழ்ச்சியாவது தமிழ் மொழியில் நடத்தப்பட்டதா?

"இல்லையென்றால் காரணம் என்ன?"

இக்கேள்விகளையே நம் கழக உறுப்பினர்கள் கேட்டிருந்தனர்.

இவற்றிற்கு, செய்தி-ஒலிபரப்பிலாகா அமைச்சர் திரு. கேஸ்கர் பதிலளிக்கையில், சுதந்தர விழாவின்போது அத்தகைய கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது உண்மைதான் என்றும், ஆனால், அந்நிகழ்ச்சிகள் எந்த ஒரு குறிப்பிட்ட மொழியிலோ மொழி அடிப்படையிலோ நடத்தப்படவில்லை"

சீர்காழி வட்ட தி. மு. க. அமைப்புக் கூட்டம்

8—9—57 மாலை 4-மணிக்கு, சீர்காழி வட்ட தி. மு. கழக அமைப்புக் கூட்டம் சீர்காழி பிடாரி கீழவீதியில் தோழர் ஆர் இராசாங்கம் அவர்கள் இல்லில் நடைபெறும்; பதிவாகியுள்ள கிளைக் கழகச் செயலாளர்கள் கலந்துகொள்ள வேண்டப்படுகிறார்கள்.

அண்ணா

சுற்றுப்பயணம்

செப்டம்பர்
8 : காலை—காஞ்சிபுரம்
  மாலை—சென்னை
11 : பகல்—எலந்தங்குடி
  மாலை—அனந்தம்பேட்டை
12 : காலை—கள்ளக்குறிச்சி
  மாலை—மணக்கநல்லூர்
14 : மாலை—அறந்தாங்கி
16 : காலை—காஞ்சிபுரம்
18 : மாலை—கீரனூர்
  மாலை—புதுக்கோட்டை
19 : மாலை—திட்டச்சேரி
20 : மாலை—சின்னதாராபுரம்
21, 22 : திருவண்ணாமலை மாநாடு

கண்துடைப்பு வேலை ஆரம்பம்

இதுவரை இந்தியப் பாராளுமன்றத்தின் கூடத்தில் சட்டமன்ற மேதைகள் என்று கருதப்பட்ட வடவரின் படங்களே இருந்துவந்துள்ளன.

இப்போது திடீரென முதன் முதலாக தென்னகத்தைச் சேர்ந்த எஸ். சத்தியமூர்த்தியின் படத்தையும் வைக்க, பல காரணங்களை முன்னிட்டு முடிவு செய்யப்பட்டுள்ளது என்று தெரியவருகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத் துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ